**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 29.07.2019–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் **: 28.07.2019** இராசிபுரம் நகராட்சி

**பொருள்கள்**

(1) இராசிபுரம் நகராட்சி தெரு விளக்குப் பிரிவில் மின் கம்பி உதவியாளராகப் பணிபுரியும் திரு மா. சிவானந்தன் 31.07.2019–இல் வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெறவுள்ளார்.

அன்னாருக்கு சிறப்பு சேமநல நிதி நிர்வாக பங்குத் தொகை (மான்ய நிதி) ரூ. 10000/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(1690/19/சி1)

**தீர்மானம் எண். 576**

அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்க அரசாணை (டி) எண். 492 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.09.2013–இல் ரூ. 5542.00 லட்சம் அனுமதிக்கப்பட்டு இத்திட்டப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டம் கழிவுநீர் குழாய் அமைக்கும் பணியின் வரைபடத்தில் கீழ்காணும் தெருக்கள் விடுபட்டுள்ளது.

1) **Zone – I** – வள்ளலார் காட்டுக்கொட்டாய்

2) **Zone – II**

1) வார்டு எண். 6 – வடக்கு காலனி
2) வார்டு எண். 12 – எம்.எஸ்.பி. சுப்பராயன் தெரு
3) வார்டு எண். 13 – பொம்மி தெரு
4) வார்டு எண். 23 – மாதா கோவில் தெரு
5) வார்டு எண். 23 – அங்காளம்மன் கோவில் தெரு

3) **Zone – III**

1) வார்டு எண். 1 – குமாரசாமி தெரு, மேற்கு காலனி
2) வார்டு எண். 3 – கிருஷ்ணன் கோவில் தெரு
3) வார்டு எண். 16 – கர்ணன் சந்து, செல்வ கணபதி சந்து, அன்னமார் சந்து

4) **Zone – IV**

1) வார்டு எண். 15 – செக்கடி தெரு

2) வார்டு எண். 25 – நாமக்கல் ரோடு – காலனி தெரு
3) வார்டு எண். 25 – செக்கார தெரு
4) வார்டு எண். 25 – அபிராமி கார்டன்
5) வார்டு எண். 26 – காட்டூர் காட்டுக்கொட்டாய்
6) வார்டு எண். 26 – அண்ணா காலனி
7) வார்டு எண். 26 – சந்திரசேகரபுரம் ரோடு காட்டூர் காட்டுக்கொட்டாய்

5) **Zone – V**

1) வார்டு எண். 9 – வி. நகர் ரோடு எண். 1
2) வார்டு எண். 9 – வி. நகர் ரோடு எண். 3
3) வார்டு எண். 10 – வி. நகர் ரோடு எண். 17, ஏரிக்கு வடக்கு பிளாக்
4) வார்டு எண். 8 – மாரப்பன் தோட்டம்
5) வார்டு எண். 20 – கோனேரிப்பட்டி எக்ஸ்.நெ. 2
6) வார்டு எண். 20 – காந்தி நகர்
7) வார்டு எண். 20 – ராம் நகர்
8) வார்டு எண். 8 – தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

6) **Zone – V** (A)

1) வார்டு எண். 8 – மாரப்பன் தோட்டம்
2) வார்டு எண். 9 – அருணாசலம் காடு, வி.நகர் ரோடு எண். 1

மேற்காணும் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்குள்ளாகவே பாதாள சாக்கடைத் திட்ட கழிவுநீர் குழாய்களை பதிக்கும் பணிகளை செய்து கொடுக்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(3814/11/இ2)**

**தீர்மானம் எண். 577**

அனுமதிக்கப்பட்டது.

( 3 ) இந்நகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் வி. நகர், நகராட்சி நடுநிலைப் பள்ளியில் கிழக்குப் பார்த்து அமைந்துள்ள இரண்டு வகுப்பறை கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாகவும், மேற்படி கட்டிடத்தினை இடித்து வழங்குமாறு பள்ளியின் தலைமையாசிரியை கோரியுள்ளார். மேற்படி கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் சேலம், அரசு பொறியியல் கல்லூரியில் சான்று பெற்று கட்டிடங்களை இடித்து அகற்றவும், சான்று பெறுவதற்கான கட்டணத்தை சேலம், அரசு பொறியியல் கல்லூரிக்கு கல்வி நிதியில் இருந்து செலுத்தவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று உறுதித்தன்மை சான்று பெற நடவடிக்கை மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(1697/19/இ1)**

**தீர்மானம் எண். 578**

அனுமதிக்கப்பட்டது.

(4) இந்நகராட்சிக்குட்பட்ட 13 வார்டுகளிலுள்ள தெரு விளக்குகளை (1) 40 வாட்ஸ் குழல் விளக்குகள் 526 எண்ணிக்கை (2) சிஎப்எல் விளக்குகள் 484 எண்ணிக்கை (3) SVL விளக்குகள் 67 மொத்தம் 1077 எண்ணிக்கை ஒப்படைக்கும் காலம் முதல் 1 ஆண்டிற்கு இயக்கவும் மற்றும் பராமரிப்பு செய்யவும் தனியார் வசம் ஒப்படைக்க 14.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மதிப்பீடு ரூ. 9,90,000/— பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் வருமாறு.

| வ. எண் | விலாசம் | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| 1 | ஸ்ரீ குமரன் எலக்ட்ரிகல்ஸ், அண்ணா சாலை சுவர்ணபுரி, சேலம் | ரூ. 9.90 | 0.03 % | — |
| 2 | யாஷ் வைஸ் எலக்ட்ரிகல்ஸ், குருசாமிபாளையம், இராசிபுரம். | | — | 0.30 % |

பெறப்பட்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.03 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ குமரன் எலக்ட்ரிகல்ஸ், சேலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(1207/19/இ1)

**தீர்மானம் எண். 579**

அனுமதிக்கப்பட்டது.

(5) இந்நகராட்சி 2019-20—ஆம் ஆண்டிற்குத் தேவையான படிவங்கள், பதிவேடுகள், எழுதுபொருட்கள் மற்றும் கணினி வசூல் மையத்திற்கு சொத்துவரி, குடிநீர் வரி, தொழில்வரி ஆகிய இனங்களுக்கான இரசீதுகள் வாங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 700000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளலாம்.

(1925/19/பி3)

**தீர்மானம் எண். 580**

அனுமதிக்கப்பட்டது.

(6) இந்நகராட்சி 2019-20—ஆம் ஆண்டிற்கு பொதுப்பிரிவு, கணினிப் பிரிவு, பொது சுகாதாரப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு கணினி பிரிண்டர்களுக்குத் தேவையான டோனர்கள், வசூல் மைய பிரிண்டர்களுக்கு தேவையான ரிப்பன்கள் வாங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 400000/—க்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(1924/19/பி3)

**தீர்மானம் எண். 581**

அனுமதிக்கப்பட்டது.

(7) இந்நகராட்சி கணினி வசூல் மையத்திற்கு ரூபாய் நோட்டுக்கள் எண்ணுவதற்கு ஏதுவாக தற்பொழுது வந்துள்ள முதல் தரமான (Advanced) இயந்திரம் வாங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 50000/–க்கு வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(1926/19/பி3)

**தீர்மானம் எண். 582**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– மா. கணேசன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி